**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பதிவுத்துறை - திரு.D.மனோஜ்குமார் @ ராஜ்குமார் என்பவரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை**

**அரசாணை (3D) எண்.5**

**நாள் : 12.04.2023**

**சுபகிருது, பங்குனி -29,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2054.**

**படிக்கப்பட்டவை:**

1. **அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.**
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.24020/கே2/ 2021, நாள் 19.04.2022.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.24020/கே2/2021, நாள் 18.01.2023.

---------

**ஆணை:**

பதிவுத்துறையில், பெரியகுளம் பதிவு மாவட்டம் கடமலைக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 04.04.2021 அன்று பணியிடை மறைந்த திருமதி.D.லதாமகேஸ்வரி என்பவரின் மகன் திரு.D.மனோஜ்குமார் @ ராஜ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 01.07.2021 நாளிட்டு அளித்த மனு பரிசீலனை செய்யப்பட்டு, திரு.D.மனோஜ்குமார் @ ராஜ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய **கல்வி மற்றும் வயதுத்** தகுதிகளை பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து பதிவுத்துறை தலைவரால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திரு.D.மனோஜ்குமார் @ ராஜ்குமார்

12.05.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு,D.மனோஜ்குமார் @ ராஜ்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறை தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறை தலைவரின் செயற்குறிப்பு அரசால் மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின் தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பதிவுத்துறையில், பெரியகுளம் பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு,D.மனோஜ்குமார் @ ராஜ்குமார் என்பவர் 12.05.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற உரிய விதியின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.1463/ட்டி1/2023, நாள் 06.03.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண். 4273366/ஜி.1/2023, நாள் 20.03.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.

✓திரு,D.மனோஜ்குமார் @ ராஜ்குமார், இளநிலை உதவியாளர்,

பெரியகுளம் பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28 வழியாக)

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 12/4/2023

12/4/23